**செய்தி வெளியீடு எண்: 223** **நாள்: 03.04.2018**

## செய்தி வெளியீடு

தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழறிஞர்களுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டுவரும் தமிழ் அமைப்புகளுக்கும், கணினி யுகத்திற்கேற்ப, தமிழ் மொழியைக் கணினியில் அனைத்துத் தளங்களிலும் பயன்படுத்தும் வகையில், தமிழ் மென்பொருள்களை உருவாக்குபவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், தமிழ் வளர்ச்சித் துறையால் விருதுகள் தோற்றுவிக்கப்பட்டு ஆண்டுதோறும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில், 2017–ஆம் ஆண்டுக்கான சித்திரைத் திங்கள் தமிழ்ப் புத்தாண்டு விருதுகளுக்குக் கீழ்க்காணும் தமிழ் அமைப்பையும், மென்பொருள் நிறுவனத்தையும் மற்றும் தகுதியான தமிழறிஞர்களையும் தெரிவு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த 29.9.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் "இலக்கணம், இலக்கியம் மற்றும் மொழியியல் துறைகளில் சிறந்து விளங்கும் அயலகத் தமிழறிஞர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் வழங்கப்படும்" என்று அறிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான விருதுகளுக்குக் கீழ்க்குறிப்பிட்டுள்ள அயலகத் தமிழர்களைத் தெரிவு செய்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்த்தாய் விருது பெறும் அமைப்பினருக்கு விருதுத்தொகை ரூபாய் 5 இலட்சம் மற்றும் கேடயமும், கபிலர் விருது, உ.வே.சா விருது, கம்பர் விருது, சொல்லின் செல்வர் விருது, ஜி.யு.போப் விருது, உமறுப் புலவர் விருது, இளங்கோவடிகள் விருது, அம்மா இலக்கிய விருது மற்றும் முதலமைச்சரின் கணினித் தமிழ் விருது ஆகிய விருதுகளைப் பெறும் விருதாளர் ஒவ்வொருவருக்கும்

ஒரு இலட்சம் ரூபாய் விருதுத் தொகையும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும் மற்றும் உலகத் தமிழ்ச் சங்க விருது, மொழிபெயர்ப்பாளர் விருது பெறும் விருதாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு இலட்சம் ரூபாய் விருதுத் தொகை வழங்கியும் விருதாளர்கள் அனைவருக்கும் தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்படுவார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5.4.2018 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் இவ்விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கவுள்ளார்கள்.

<u>விருதுகள் பெறுவோர்</u>

| வ. எண் | விருது | விருதாளர் |
|---|---|---|
| 1. | தமிழ்த்தாய் விருது – 2017 | பெங்களூரு தமிழ்ச் சங்கம், பெங்களூரு |
| 2. | கபிலர் விருது–2017 | முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் |
| 3. | உ.வே.சா விருது–2017 | திரு.ச. கிருட்டினமூர்த்தி |
| 4. | கம்பர் விருது–2017 | திரு. சுகி. சிவம் |
| 5. | சொல்லின் செல்வர் விருது–2017 | முனைவர் வைகைச் செல்வன் |
| 6. | ஜி.யு.போப் விருது–2017 | திருமதி கோ. இராஜேஸ்வரி கோதண்டம் |
| 7. | உமறுப்புலவர் விருது–2017 | திரு.ஹாஜி எம்.முகம்மது யூசுப் |
| 8. | இளங்கோவடிகள் விருது–2017 | முனைவர் வெ. நல்லதம்பி |
| 9. | அம்மா இலக்கிய விருது–2017 | முனைவர் எம்.எஸ். ஸ்ரீஇலட்சுமி, சிங்கப்பூர் |
| 10 | முதலமைச்சர் கணினித் தமிழ் விருது–2016 | அல்டிமேட் மென்பொருள் தீர்வகம் |

| | மொழிபெயர்ப்பாளர் விருது–2017 (10 விருதுகள்) | | |
|---|---|---|---|
| 11 | திரு. நெல்லை சு. முத்து | 16 | திருமதி வசந்தா சியாமளம் |
| 12 | திரு. தி.வ. தெய்வசிகாமணி (தெசிணி) | 17 | முனைவர் இரா.கு. ஆல்துரை |
| 13 | திரு  ஆ. செல்வராசு (எ) குறிஞ்சிவேலன் | 18 | பேராசிரியர் சி.அ. சங்கரநாராயணன் |
| 14 | முனைவர் ஆனைவாரி ஆனந்தன் | 19 | திருமதி ஆண்டாள் பிரியதர்சினி |
| 15 | திரு. மறவன் புலவு சச்சிதானந்தம் | 20 | முனைவர் தர்லோசன் சிங் பேடி |

| உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் 2016 | | |
|---|---|---|
| 21 | இலக்கிய விருது – 2016 | திரு. நா.ஆண்டியப்பன், சிங்கப்பூர் |
| 22 | இலக்கண விருது – 2016 | திரு. பெஞ்சமின் லெபோ, பிரான்சு |
| 23 | மொழியியல் விருது – 2016 | முனைவர் சுபாஷினி, செருமானியம் |
| உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் 2017 | | |
| 24 | இலக்கிய விருது – 2017 | முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்,  ஆசுதிரேலியா |
| 25 | இலக்கண விருது – 2017 | முனைவர் உல்ரிகே நிகோலஸ்,  செருமானியம் |
| 26 | மொழியியல் விருது – 2017 | திரு. மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, ஆசுதிரேலியா |

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.